# தாய்

கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997



2023

பங்குனி – ஐப்பசி தாய்–26 சேய்–162














வெளியீடு – கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம். தொ.பே (0094) 777 289960 விலை–40/-


Nixon Miralee
NM
Nixon Miralee
EXPORTER BY
Nixon Miraalle
NM
100% Premium Quality
EXPORT & IMPORT COMPANY
Tuticorin - Tamilnadu - India
Nixon Miralee
The World's Favourite
Maldive Fish

# தாய்

THAAI

## எமது எண்ணம்

March - October 2023

P.O. Box: 1233, Colombo

Mobile: 077 7289960

e.mail:anandapulle@yahoo.com

anandapulle@hotmail.com

www.colombostjosephvazmandram.lk


இந்த காலத்தின் ஒரு முக்கிய பேச்சுப் பொருளாக விளங்குவது மலையகம் - 200 இலங்கை திருநாட்டில் கடந்த 200 வருடங்காக எம்மோடு பயணிக்கும் மலையக உறவுகள் அவர்கள் இங்கு வந்து 200 ஆண்டுகள் கடந்த நிலையில் அவர்களின் வாழ்வாதாரம் பொருளாதார கல்வி, உரிமை என பல கோணங்களில் அவர்களின் மேம்பாடு பற்றி சிந்திக்கின்றோம்.

இம்மக்களின் ஒரு பகுதியினர் தமிழ் பேசும் கத்தோலிக்கர்களாகவும் இருக்கின்றார்கள். கத்தோலிக்க திருச்சபையை பொறுத்தவரையில் கண்டி, பதுளை, காலி, இரத்தினபுரி மற்றும் கொழும்பு ஆகிய மறைமாவட்டங்களிலே பரவலாக வாழ்கின்றார்கள். இவர்களுக்கான ஆன்மீகப் பணிகளை அந்தந்த மறைமாவட்டங்களிலே தமிழ்பேசும் குருவானவர்கள் பற்றாக்குறையாக இருந்தாலும் தங்களால் இயன்றவரை பல விதமாக ஆன்மீக பணிகளை முன்னெடுப்பதை நாம் காணலாம். விசேடமாக இவர்களின் பொருளாதார கல்வி மேம்பாட்டிற்காக பல துறவற சபைகள், கத்தோலிக்க நிறுவனங்கள், பல பணிகளை நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றன. இப்பணிகளானது கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்லாது அவர்களோடு சார்ந்த ஏனைய மதத்தவர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு கத்தோ-லிக்க திருச்சபையில் மேலான ஆளுமை, வளத்திற்கு அமைய இன்னும் பல மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்பது பலரது கருத்தாக உள்ளது. எனவே தொடர்ந்து இம்மக்களும் நம்மவர்கள் என்ற உணர்வோடு பொதுநிலையினர், குருக்கள், துறவிகள் அனைவரும் இணைந்து இவர்களின் வாழ்வு மேம்பட உழைப்போம். அத்தோடு இவ்விதழிலே எமது கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் சிம்ம குரலோன் என தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களால் கவரப்பட்ட பற்பல பணிகளை செய்து எம்மைவிட்டு விண்ணுலகம் சென்ற அருள்பணி. ஒகஸ்டின் பர்னாந்து அடிகளாரை அன்போடு நினைவுகூர்கின்றோம். அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம். மேலும் குருத்துவ வெள்ளிவிழா காணும் அருள்பணி. யூட் ஆஞ்சலோ அடிகளாரின் பணி சிறக்க வாழ்த்து-கின்றோம்

**இறை ஆசீருடன்**


# தாய் ஆசிரியர் குழு

**பிரதம ஆசிரியர்**

அருட்பணி. ஆனந்தன் பொ்னாண்டோபுள்ளே

✆ : 0777 289960

**ஆசிரியர்**

அருட்பணி. ஒனாசியஸ் பெ்னாண்டோ

✆ : 0770 090005

**சஞ்சிகைக் குழுத் தலைவர்**

திரு. எனஸ்டன் பெ்னாண்டோ

✆ : 0774 985940

✉ : enestons@gmail.com

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**

திருமதி. சுமதி கோமஸ்

✆ : 0773 672113

**கணனி வடிவமைப்பு**

திருமதி. S. பற்றிக் பெ்னாண்டோ

✆ : 0771 227773

**சஞ்சிகை ஒழுங்கமைப்பு**

திரு. ஜெயக்குமார் பெ்னாண்டோ

**விநியோகம்**

திரு. பீற்றர் சில்வெஸ்டர்

✆ : 0776 010788

✉ : sylvester770@gmail.com

**இணையத்தளம்**

www.colombostjosephvazmandram.lk






# இலங்கை பெருந்தோட்டப் பிராந்திய கத்தோலிக்க ஆயர்களினால் நடாத்தப்படும் மலையகம் - 200வது ஊடக மாநாடு

## பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழும் இந்திய வம்சாவளியினர் இலங்கைக்கு வருகை தந்ததன் 200வது ஆண்டு நிறைவு 1823/2023

### 200 ஆண்டுகளாக இலங்கையில் பெருந்தோட்ட மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கான சிபாரிசுகள்

1. இலங்கையில் பெருந்தோட்ட மக்களின் அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகளும் அவை தீர்க்கப்படாமைக்கான காரணங்களானவை, அரசாங்கத்தினதும் பெருந்தோட்ட முகாமைத்துவத்தினதும் நிலையான குறிக்கோள்களும், திட்டங்களும் அவை குறித்து இன்மையாகும்.

2. பின்தங்கிய நிலையிலுள்ள இம்மக்களை இந்நாட்டின் அர்த்தமுள்ள பிரஜைகளாக்க, இலங்கைப் பெருந்தோட்டப் பிராந்திய கத்தோலிக்க ஆயர்கள் சிபாரிசுகளை (ஆலோசனைகள்) முன்வைக்கின்றனர்.

| இல | பெருந்தோட்ட மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் | பெருந்தோட்டப் பகுதியில் பணிபுரியும் ஆயர்களின் சிபாரிசு |
|---|---|---|
| 1 | **கல்வி**<br>முன்னுரை :<br>இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வருகை தந்த பெருந்தோட்ட மக்களின் பிள்ளைகள் 125 ஆண்டுகளுக்கும் மேலாகக் கல்வியின்றி தமது பெற்றோர், பெரியோருடன் சேர்ந்து வேலை செய்வர் என்றே எதிர்பார்க்கப்பட்டது. 1943ஆம் ஆண்டு இலவசக் கல்வி முறை இந்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும், தோட்டப் பாடசாலைகள் 1970 தசாப்தத்தின் பிற்பகுதி வரை தேசியக் கல்விக் கொள்கையில் இணைக்கப்படவில்லை. இதனால் 1943ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையின் பயனை நாட்டின் ஏனைய பிரிவினரின் பிள்ளைகள் அனுபவிக்கும்போது தோட்டப்பகுதி மக்களின் பிள்ளைகள் பின்தங்கிய நிலையிலேயே வைக்கப்பட்டனர். | |
| 1.1 | முன்பள்ளி கல்வியானது சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிடம் (பராமரிப்பு நிலையங்கள் ஊடாக) பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தோட்ட நிர்வாகம் இதனை மேற்பார்வை செய்கிறது. | முன்பள்ளிகளின் நிர்வாகம், நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போன்று அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ் பிரதேச செயலகங்கள் ஊடாக பதிவு செய்து சுயாதீனமாக இயங்க வழிவகை செய்தல் வேண்டும். |
| 1.2 | தோட்டப்பகுதியின் ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றமை குறிப்பாக விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களுக்காக ஆசிரியப் பற்றாக்குறை உள்ளமை | நுவரெலியா மாவட்டத்தில் பத்தனையில் அமைந்துள்ள ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் ஆகிய துறைகளில் ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் குறிப்பாக அவர்களை பெருந்தோட்டப் பிரதேச பாடசாலைகளுக்கு நியமித்தல். |

| | | |
|---|---|---|
| 1.3 | வடமத்திய மாகாணம், மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம் ஆகியவற்றில் போதுமான அளவில் தமிழ் மொழிப் பாடசாலைகள் இல்லாமை. | தமிழ் மொழி மூலம் பாடசாலைகளைக் குறிப்பிட்ட பிரதேசங்களில் நிறுவுதல், அல்லது சிங்கள பாடசாலைகளில் தமிழ் மொழி பிரிவுகளை உருவாக்குதல். |
| 1.4 | க.பொ.த (உயர்தர) வகுப்புக்களில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடப்பிரிவில் கற்பதற்குப் பெருந்தோட்டப் பகுதியில் குறிப்பாக ஊவா, சப்ரகமுவ, வடமேல், தென், மேல் மாகாணங்களில் தமிழ்மொழி மூலமான பாடசாலைகள் இன்மை, (மத்திய மாகாணத்தில் ஒரு சில பாடசாலைகள் உள்ளன) | கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடப்பிரிவில் கற்பதற்கு மேற்குறிப்பிட்ட மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மாவட்டத்துக்கு ஒரு பாடசாலையையேனும் நிறுவுதல் அல்லது சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் மேற்குறிப்பிட்ட பாடங்களைக் கற்பதற்கான, தமிழ் மொழிப் பிரிவை நிறுவுதல். |
| 1.5 | பெருந்தோட்டப் பகுதியில் தமிழ்மொழி மூலம் போதிய அளவு தொழில் பயிற்சி நிலையங்கள் இன்மை. | தேசிய தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்கும் தமிழ்மொழி மூலமான தொழில் பயிற்சி நிலையங்களை அமைத்தல். |
| 1.6 | பெருந்தோட்ட மக்களின் கைத்தொழில், சுற்றாடல், மரபு ரீதியான கலை. கலாசாரம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கான அரச பல்கலைக்கழகம் இன்மை. | மலையக மக்களைப் பற்றியும் பெருந்தோட்ட கைத்தொழில் பற்றியும் கற்பதற்கும் ஆய்வு செய்வதற்கும் பல்கலைக்கழகம் ஒன்றை அல்லது பெருந்தோட்டப் பகுதியில் இயங்கும் பல்கலைக்கழகம் ஒன்றின் வளாகம் ஒன்றினை நிறுவுதல். |
| 2 | **சுத்தமும் சுகாதாரமும்**<br>முன்னுரை :<br>பெருந்தோட்டப் பிராந்தியத்தில் ஆரம்ப (Primary) சுகாதார பராமரிப்பு முறை இன்னும் தேசிய சுகாதார முறைமையின் பிரிவின் கீழ் உள்வாங்கப்படவில்லை. அதற்குப் பதிலாக 500 தோட்ட வைத்திய மத்திய நிலையங்கள் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. பெருந்தோட்ட மக்கள் பெரும்பான்மையாகத் தண்ணீர் வளங்கொண்ட மலைப் பிரதேசங்களில் வாழுகின்ற போதிலும் அவர்களுக்கான குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு அவர்களுக்கு விநியோகம் செய்யப்படுவதில்லை. | |
| 2.1 | பெருந்தோட்ட மக்கள் ஆரம்ப சுகாதார சேவைகளை தேசிய இலவச மருத்துவ முறைமையில் பெற முடியாத நிலையில் இருத்தல். | தோட்ட மருத்துவ முறைகளைத் தேசிய மருத்துவப் பிரிவிற்குள் உள்வாங்குதல். இதற்காக பாராளுமன்ற சுகாதார மேற்பார்வை குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் |
| 2.2 | பெருந்தோட்டப் பகுதியில் மருத்துவத்துறை சார்ந்த மனித வளங்களும் ஏனைய வசதிகளும் மிகக் குறைவாக இருப்பதுடன் வைத்திய நிலையங்களை அடையும் வழிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. | தோட்டப்பகுதியில் காணப்படும் இக்குறைபாடுகளை நீக்குவதும், தோட்ட வைத்திய நிலையங்களில் வைத்திய அதிகாரிகளின் சேவைகளை மேம்படுத்தலும், அவசர சேவை ஊர்தி (Ambulance) வழங்குதல், வீதிகளை சீர்திருத்துதல். |
| 2.3 | போசாக்குக் குறைவும் மந்த போசாக்கும் தோட்ட மக்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது. | அடையாளம் காணப்பட்ட பிள்ளைகளின் போசாக்கினை அதிகரிக்க விசேட போசாக்குத் திட்டங்களை அறிமுகம் செய்தல். |
| 2.4 | சுத்தமான குடிநீர் வசதியின்மை | தேசிய வடிகால் அமைப்பு சபை ஊடாக சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோகம் கிடைக்கச் செய்தல். |
| 2.5 | கழிவகற்றல் மற்றும் கழிப்பிட சுகாதார வசதியின்மை தோட்ட மக்களிடையே நோய்ப்பரவல் விரைவாக இடம்பெற ஒரு காரணமாகும். | மலசல கூட வசதி போன்ற அவசியமான அடிப்படை சுகாதார வசதிகளை செய்து கொடுத்தல் அவசியமாகும். |
| 3 | **வாழ்வாதாரம்**<br>முன்னுரை :<br>தேசிய மட்டத்தில் பெருந்தோட்ட மக்களின் வறுமை நிலையானது தேசிய வறுமை அளவைவிட இரட்டிப்பாக உள்ளன என புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றபோதும் தேசிய வறுமை ஒழிப்புத் திட்டமான சமுர்த்தித் திட்டத்தில் பெருந்தோட்ட மக்கள் முழுமையாக உள்வாங்கப்படவில்லை. அவர்களுக்கான மாற்று பொருளாதார வாய்ப்புகளும் குறைவாகவே காணப்படுகின்றன. | |
| 3.1 | பெரும்பாலான பெருந்தோட்ட மக்களுக்கு தேசிய வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நன்மைகள் கிடைப்பதில்லை. | தேசிய வறுமை ஒழிப்புத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களை உள்வாங்குதலை சிறப்பு செயற்பாடுகளாகக் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| 3.2 | மாற்று வருமானத்திற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக உள்ள அதே நேரம் அதற்காக காணிகளைப் பயன்படுத்துவதில் பல கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. | தற்போது காணிகளை மாற்றுப் பொருளாதார நோக்கத்துக்காக பயன்படுத்துவதில் நிலவும் தடைகளைக் குறைக்கத் தேவையான வழிமுறைகளைக் கண்டறிதல். வருமானத்தை அதிகரிக்கத் தேவையான மாற்றுப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல். |
| 3.3 | பெருந்தோட்டப் பிராந்தியத்தில் வேலையின்மையும், கீழ் உழைப்பும் நிலவுகின்றமை. | வேலைவாய்ப்பினை ஏற்படுத்த மந்தை வளர்ப்பு, விவசாயம், வீட்டுத் தோட்டம், மலர் வளர்ப்பு, சிறு வியாபாரம் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதியளித்தல். |
| 4 | **வீடமைப்பு மற்றும் காணி, நிலம் தொடர்பானது**<br>முன்னுரை :<br>பெருந்தோட்ட மக்களின் பெரும்பாலானோர் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வந்தது முதல் லைன் அறைகள் எனப்பட்ட வீடுகளிலேயே வாழ்கின்றனர். தமக்கென சிறு நிலங்களைப் பெற்றுத் தமக்கென வீடுகளை அமைக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை. அவர்கள் தன்மானத்துடன் வாழும் பொருட்டு புதிய திட்டங்களை மேற்கொண்டு, சட்ட ரீதியான நிலத்தைப் பெற்று வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். | |
| 4.1 | பல ஆய்வுகள் மூலம் பெருந்தோட்ட மக்கள் நிலமற்ற மக்களெனத் தெரிய வந்துள்ளது. | தமக்கென நிலத்தைப் பெற்று வீடுகளை அமைக்கவும், வருமானத்தை அதிகரிக்கவும் வாய்ப்பினை ஏற்படுத்துதல் தேசியக் கொள்கைத் தீர்மானம் ஒன்றை எடுத்தல் வேண்டும். |
| 4.2 | லைன் அறைகள் அதில் வாழ்வோருக்குப் பல இன்னல்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக பெண்கள், பிள்ளைகளுக்குத் தமது தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள வாய்ப்பின்மை, நாகரீக சமுதாயத்திற்கு இந்த வீடமைப்பு முறை பொருந்தாது. | அடிப்படை வசதிகளைக் கொண்ட தனி வீடுகளை அமைக்கும் முறையை ஏற்படுத்தித் தனித்துவத்தை மதித்துப் பொருத்தமான வாழ்க்கை முறையை ஏற்படுத்தல். |
| 4.3 | இம்மக்கள் வெள்ளம், மண்சரிவு, தீ விபத்து போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகின்றமை. | தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தில் பெருந்தோட்ட மக்களையும் பிரதேசங்களையும் உள்ளடக்கல். மின்சாரக் கட்டமைப்பை சீரமைத்து தீ விபத்து என்பவற்றைத் தவிர்த்தல். |
| 4.4 | தனிப்பட்ட வீடுகளைப் பெற்றவர்களுக்கு சட்டப்படியான வீட்டுக் காணி உறுதிப் பத்திரங்கள் இன்மை. | அண்மையில் அமைக்கப்பட்ட வீடுகளுக்கு சட்டப்படியான முழுமையான வீட்டுக்காணி உறுதிப்பத்திரங்களை வழங்குதல். |
| 4.5 | பெருந்தோட்டப் பகுதியில் பொது நிர்வாக அலகுகளை அமைப்பதில் அரசாங்கத்தின் கவனமும், பங்களிப்பும் குறைவாகக் காணப்படல். | பெருந்தோட்டப் பகுதியில் கிராமசேவகர் பிரிவுகளையும், பிரதேச செயலாளர் பிரிவுகளையும் தேவையான அளவுக்கு அதிகரித்தல். நடைமுறைப்படுத்தல். |
| 5 | **மரபுகளும் பண்பாடும்**<br>முன்னுரை :<br>இலங்கை குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 'இந்தியத் தமிழர்' என தனியான இனமாகவே பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழும் மக்களைக் கணக்கிடுகின்றது. (2012இல் 4.4%) இலங்கை மத்திய வங்கி கிராமியதுறை, நகர துறை என்பதற்கு மேலாக 'தோட்டத்துறை' என ஒரு துறை ஊடாகவும் ஒப்பீட்டு சமூகப் பொருளாதார குறிகாட்டிகளைக் காட்டி வருகிறது. 'இந்தியத் தமிழர்' என புள்ளிவிபரத் திணைக்களத்தால் குறிப்பிடப்படுபவர்களும், தோட்டத் துறையினர் என மத்திய வங்கியினால் குறிப்பிடப்படுபவர்களும் ஒரே இனப் பிரிவினராவார். அவர்களே பெருந்தோட்டச் சமூகத்தினர் என இங்கே குறிப்பிடப்படுகின்றனர். இவர்களுக்கான தனித்துவமான அடையாளம், மரபுகள், மொழி, கலை, கலாசாரம், இலக்கியம் என்பன உண்டு. இவற்றின் அடிப்படையில் அவர்கள் தனித்துவமான இனமாக அடையாளங் காணப்படவும், கௌரவமாக நடாத்தப்படவும் வேண்டும். | |
| 5.1 | பெருந்தோட்ட மக்கள் முழுமை பெறாத குடியுரிமையாளர்களாகவே அடையாளம் காணப்பட்டுள்ளனர். | அவர்களது குடியுரிமையை அர்த்தமுள்ள குடியுரிமையாக ஆக்குவதன் மூலம் அவர்களது அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளித்தல். |

தொடர்ச்சி 22ம் பக்கம்

# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி

**(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய "திருவழிபாடு ஓர் அறிமுகம்" என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)**

## திருப்பலியின் மேன்மை

### 2. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்

வரலாற்றை பின்னோக்கிப் பார்க்கும்போது, இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன், மக்கள் திருப்பலியைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை நாம் நன்கு உணர முடியும். அதற்குப் பல காரணங்கள் உண்டு. எடுத்துக்காட்டாக;



- இலத்தீன் மொழியைப் புரிந்துகொள்ள முடியாத நிலை
- மக்களுக்கும் குருவுக்கும் இடையே இருந்த தொடர்பற்ற நிலை
- திருப்பலியை ஒப்புக்கொடுப்பது குருவின் பணி. மக்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை என்ற மனநிலை
- திருப்பலியில் தூங்காமல் இருக்கவும், நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவழிக்கவும் செபமாலை சொல்வோம் என்ற மனநிலை
- திருப்பலியைப் பற்றி மக்களுக்குப் போதிய விளக்கம் அளிக்கப்படாத நிலை.

இவ்வாறு பல்வேறு காரணங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம்.

### 3. திருப்பலி – ஒரு "மறைபொருள்"

உண்மையைச் சொல்ல வேண்டுமானால், பல செய்திகள் பல நூற்றாண்டுகளாக விளக்கிக் கூறப்படாமல் ஒரு "மறைபொருளாகவே" மூடி மறைக்கப்பட்டு வந்துள்ளன. இதற்கு ஓர் உதாரணம் சொல்லலாம். பெரிய பணக்காரர் ஒருவர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு திருத்தந்தையைச் சந்திக்க விரும்பினார். ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் திருத்தந்தையைச் சந்திப்பது என்பது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. இருந்தாலும் ஒரு குருவைப் போன்று வேடமணிந்து திருத்தந்தையைச் சந்தித்துப் பேசிவிடுவது என்று முடிவு செய்தார். தம் பங்குக் குருவின் வெள்ளை அங்கி ஒன்றை, அவருக்குத் தெரியாமல் அவரிடமிருந்து எடுத்துக் கொண்டு அணிந்து கொண்டு திருந்தந்தையின் மாளிகையில் மிக எளிதாக நுழைந்து விட்டார். திருத்தந்தையையும் சந்தித்து அவரோடு உளமார உரையாடினார்.

திரும்பி வரும்போது மனதில் ஒரே புழுக்கம். என்ன இருந்தாலும் திருட்டு அங்கியை போட்டுக் கொண்டு திருட்டுத்தனமாகத் திருத்தந்தையைச் சந்தித்த குற்றத்தை ஒப்புரவு அருள்சாதனத்தில் அறிக்கையிட்டு பாவ மன்னிப்புப் பெற விரும்பினார். எனவே திருத்தந்தையின் மாளிகையில் வேகமாகச் சென்று கொண்டிந்த ஒரு குருவைப் பிடித்து, அமர்த்தி, தம் பாவத்தை அவரிடம் அறிக்கையிடத் தொடங்கினார். தாம் ஓர் அங்கியைத் திருடி, குருவானவர் போல வேடம் போட்டு, திருத்தந்தையைச் சந்தித்ததற்கு மன்னிப்புக் கேட்டார். உடனே அந்தக் குரு, "வேறு ஒரு நல்ல சாமியாரா பார்த்து பாவசங்கீர்த்தனம் பண்ணு. ஏன்னா நானும் உன்னைப் போல் இங்கு வந்தவன் தான்" என்றாராம். அதாவது, திருத்தந்தை ஒரு மறைபொருளாக மறைத்து வைக்கப்பட்டிருந்ததைப் போலவே, திருவழிபாடு பற்றிய பல உண்மைகள்



மக்களுக்கு விளக்கிக் கூறப்படாமல், மறைபொருளாகவே இருந்து வந்துள்ளன.

திருப்பலியில் நம் மக்கள் அடிக்கடி கலந்து கொண்டாலும் அது மக்களுக்குப் புரியாத ஒரு "மறைபொருளாகவே" இன்றும் இருக்கிறது. எனவே மக்கள் அதை நன்றாகப் புரிந்து கொள்ள நாம் உதவ வேண்டும். அப்பொழுதுதான், மக்கள் திருப்பலியை முழுமையாகப் புரிந்து, உணர்ந்து, பயனுள்ள வகையில் பங்கேற்க முடியும்.

### 4. திருப்பலியின் நான்கு பகுதிகள்.

சாதராணமாகத் திருப்பலியை இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு, என்று இரு பெரும் பகுதிகளாகத் தான் பிரிப்பார்கள். இருந்தாலும் நம் வசதிக்காக, நாம் இன்னும் எளிதாகவும், நன்றாகவும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, அதை நான்கு பகுதிகளாகப் பிரித்து இப்போது அலசிப் பார்க்கப் போகிறோம். அவை முறையே

1. **தொடக்கச் சடங்குகள்**
2. **இறைவார்த்தை வழிபாடு**
3. **நற்கருணை வழிபாடு**
4. **முடிவுச் சடங்குகள்**

**தொடரும்**

இலங்கை மண்ணில் கொழும்பு உயர்மறைமாவட்டக் குருவாக மலர்ந்து 50 ஆண்டுகள் குருத்துவப் பணியை நிறைவு செய்து எம்மை விட்டுப் பிரிந்து சென்ற அருட்தந்தை நிக்கலஸ் ஒகஸ்டின் அடிகளாரை அன்புடனும் பெருமையுடனும் கொழும்பு புனித யோசவ் வாஸ் மன்றம் நினைவுகூருகின்றது.

நீர்கொழும்பு பெரியதெரு பங்கின் முன்னக்கரைக் கிராமத்தில் பிறந்து வாழ்ந்து அந்த மண் வாசனையுடன் முழுக் கொழும்பு உயர்மறைமாவட்டத்தையும் 50 ஆண்டுகளாக வலம் வந்து அதிகமாக கொழும்பு மா நகர் பங்குகளில் கால் ஊன்றி தமிழ் மக்களின் ஆன்மீக வாழ்வுக்காக கடின உழைப்பை வழங்கியவர். கர்தினால் தோமஸ் குரே ஆண்டகையினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு, பேராயரின் கீழ் தன் பணியைத் தொடங்கி, அதன்பின் வந்த மூன்று பேராயர்களின் கீழ் பணியாற்றினார். அவரை மிகவும் உயர்த்திய பேராயராக அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையைக் குறிப்பிட முடியும். கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களை பராமரிக்க அக்காலத்தில் தமிழ் அப்போஸ்தலிக்க குருவாக அருட்பணி. ஒகஸ்டின் அடிகளாரை பேராயர் அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை நியமித்து தமிழ் மக்களுடைய தேவைகளை



# அருட்தந்தை ஒகஸ்டின் அடிகளார் ஒரு யுகம்

**அருட்பணி. ஆனந்தன்**

கொழும்பு உயர்மறைமாவட்ட நிர்வாக மட்டத்தில் முன் வைக்க அது ஒரு பெரிய சந்தர்ப்பமாக அமைந்தது. ஆகவே அக்காலத்தில் அவரின் சிபாரிசில் மறைமாவட்ட ரீதியாக தமிழ் இளைஞர்களுக்கு பொறுப்பாக ஒரு தமிழ் குரு நியமிக்கப்பட்டார். தமிழ் மக்களுக்காக இறையியல் கல்லூரி உருவாக்கப்பட்டது. மேலும் ஞான ஒளி தமிழ் பத்திரிகை வர தேவையான வித்திடப்பட்டதும் இவரால்தான்.

பேராயர் அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையின் காலம் வரும்போது அருட்தந்தை ஒரு வளர்ந்த அனுபவம் நிறைந்த ஏனைய குருக்களால் மதிக்கப்படும் குருவாக இருந்தது மேலும் இவற்றை தொடங்க அவருக்கு உதவியது. அருட்தந்தையின் இனிய குரல் தமிழ் வழிபாடுகளை உயர்த்தி எடுப்பதாக இருந்தது. அவர் செக்கடித்தெரு வேளாங்கண்ணி ஆலயத்தில் இருந்த காலத்தில் வேளாங்கண்ணி நவநாள் தொடக்கப்பட்டு அது மக்கள் வெள்ளம் பெருகும் விதத்தில் வளர்த்தெடுத்தவர் அவர் என்று சொன்னால் அது மிகையாகாது. அவர் தன்னுடைய நீண்டகால பணியை ஆற்றிய கொம்பனித்தெரு குழந்தை இயேசு திருத்தலத்திலுள்ளவர்களுக்கும் சேவையாற்ற அவருக்குக் கிடைத்த ஒரு பாக்கியமான பணிதான். அருட்தந்தை வறியவர்களையும், அனாதைகளையும் தேடிச் சென்று உதவியது, எமக்குத் தெரியும். விசேடமாக அனாதை இல்லங்கள் போன்றவற்றை பராமரிக்க கை கொடுத்தார்.

அவர் இருந்த பங்குகளில் வாழும் பேருபகாரிகளின் உதவியினால் பல காரியங்களைச் செய்தார். தேவத்தையில் பெரிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள "பியசெவன" எனும் அருட்தந்தையரின் முதியோர் இல்ல கட்டுமான செலவுகளை தான் அறிந்தவரிடம் முன் நின்று பெற்றுக்கொடுத்தார். அவர் எப்போதும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பங்குகளுக்கே அனுப்பப்பட்டார். ஆகவே அவருடைய பணி கூடிய தமிழ் ஆன்மீகப் பணியாக இருந்ததன் காரணமாக தமிழர் பக்கம் சார்ந்தவர் என்று பலர் பிழையாக புரிந்து கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் அது எந்த தமிழ் குருவும் சரியாக பணிசெய்யும் போது தவிர்க்க முடியாத ஒரு நிலையாகும். முக்கியமாக நாட்டின் தென்பகுதி மறைமாவட்டங்களில்....

தொடர்ச்சி 22ம் பக்கம்



# சேனைக்குரிய பக்தி

## VEXILLUM LEGIONIS - சேனை அணிவகுப்புக் கொடி




### மரியாயின் சேனையின் தனிச் சிறந்த சேவையாக விளங்குவது

## வீடுகளுக்குச் சென்று மக்களை சந்தித்தல்

வீடு சந்திப்புப் பணியாவது ஓர் உத்தம பணியாக கருதப்படுகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் இப்பணியை செய்யும் போது கிறிஸ்து நம்மோடு இருந்து அவரது அன்பை நம் மூலம் மற்றவர்களுக்கு கொடுக்கின்றார். அப்படியாயின் நாமும் கிறிஸ்துவை அணிந்தவர்களாய் கிறிஸ்துவின் அன்பு நிறைந்தவர்களாய் கிறிஸ்துவின் தாழ்மை உள்ளவர்களாய் இருக்கவேண்டும். சேனை தன் தொடக்க காலத்திலேயே இந்த பணியில் ஈடுபடவில்லை. எனினும், பாரம்பரியமாக இந்த பணி சேனைக்கு மிக விருப்பமுள்ள ஒன்றாகிவிட்டது. வீடு சந்திப்பு, சேனையின் தனிச்சிறந்த சேவையாகவும், மிகுந்த நன்மை பயக்கத்தக்க வழியாகவும், சேனை தன் கண்ணின் கருவிழியென மதிக்கும் அப்போஸ்தலத் தொண்டாகவும் விளங்குகின்றது. இந்தப் பணிதான் சேனையின் முக்கிய அம்சம்.

ஒவ்வொரு மனிதன் பேரிலும், ஒவ்வொரு குடும்பத்தின் பேரிலும், திருச்சபையின் அக்கறையை காட்டும் வகையில் இந்த சந்திப்பின் மூலம் தனிப்பட்ட தொடர்பு ஏற்படுகிறது.

“அக்கம் பக்கத்திலிருக்கும் கிறிஸ்தவ குடும்பங்களோடு மட்டும் திருச்சபையின் மேய்ப்புப் பணி பற்றிய அக்கறை நின்றுவிடக்கூடாது. கிறிஸ்துவின் இதயத்திற்கொப்ப அதன் அக்கறையை விரிவுப்படுத்தி எல்லாக் குடும்பங்களின், இன்னும் குறிப்பாக, துன்பத்திலும் முரண்பாடான சூழ்நிலைகளிலும் வாழும் குடும்பங்களின் மேல் அக்கறையுள்ள செயல்பாடு கொள்ள வேண்டும். திருச்சபை அவர்கள் அனைவருக்கும், அவர்களது துன்ப துயர வேளைகளில் உண்மையின் வார்த்தையை, நன்மைத்தனத்தைப் புரிந்து கொள்ளுவதை, நம்பிக்கையை, ஆழமான பரிவிரக்கத்தைக் கொடுக்க வேண்டும். அவர்கள் அனைவருக்கும் திருச்சபை தன்னலமற்ற உதவி புரிய வேண்டும். இதன் மூலம் படைத்தவர் உலகின் தொடக்கத்தில் விரும்பிய, கிறிஸ்து தனது மீட்பளிக்கும் அருளினால் புதுப்பித்த ஒரு உன்னத குடும்பத்தை உருவாக்க முன்வருவார்கள்” (FC 65)

பின்வரும் பக்கங்களில் விரித்துரைக்கப்பட்டுள்ள திரு இருதய அரசாட்சியை நிறுவுதல், பங்குக் குடிசனக்கணக் கெடுத்தல், கத்தோலிக்க வெளியீடுகளை அறிமுகப்படுத்துதல் போன்ற பணிகள் இல்லங்களை சந்திக்க உதவும் சில வழிகளாகும். வீடுகளை சந்திப்பதன் மூலம்

**அற்புத மாதா கியூரியா**
**அங்கத்தவர்கள், நீர்கொழும்பு**

கிறிஸ்துவுக்குகந்த வாழ்வு வாழக்கூடிய கத்தோலிக்கர்களை மட்டுமல்லாது அனைவரையும், சேனையாரின் அப்போஸ்தல ஆர்வத்துக்குட்படுத்த முடியும். கத்தோலிக்கரல்லாதார், கிறிஸ்துவரல்லாதார் மற்றும் திருமறையிலிருந்து விலக்கப்பட்ட கத்தோலிக்கர் முறைப்படி திருமணம் செய்யாதோர், மறைப்போதகம் தேவைப்படுவோர், தனிமையில் வாடுவோர், மற்றும் ஊனமுற்றோர் ஆகியோர் மட்டில் தனிக்கவனம் செலுத்த இயலும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் பணிபுரியும் நோக்கத்துடன் நாம் சந்திக்க வேண்டும். சேனையாரின் சந்திப்பானது தாழ்ச்சியோடும் எளிமையோடும் அமைய வேண்டும். சேனையார் தம்மை உயர்வாகக் கருதிக்கொண்டு அறிவுரைகள் கூறினால் மக்கள் சேனையாரின் சந்திப்பை தவறான கருத்துடன்...

> **மரியாயின் சேனையானது 1921ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டை நிறைவு செய்வதையிட்டு மரியன்னையோடு இணைந்து மரியாயின் சேனை அங்கத்தினர்களாகிய நாங்களும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.**

தொடர்ச்சி 21ம் பக்கம்

ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன்.[தி.பா 13]

# நற்செய்திப் பெருவிழா – 2023

கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் பல ஆன்மீகப் பணிகளை ஏற்பாடு செய்துவரும் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றமானது இவ்வருடம் ஆடிமாதத்தில் மாபெரும் நிகழ்வாக பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் ஆசீர்வாதத்துடனும் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையிலும் நற்செய்திப் பெருவிழா எனும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. ஜூலை மாதம் 7ம் நாள் முதல் 14ம் நாள் நாள் வரை எட்டு நாட்களாக கொழும்பிலுள்ள வெவ்வேறு ஆலயங்களில் மாலை 6.00 மணிமுதல் 9.00மணிவரையும் திருப்பலி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் நற்கருணை ஆராதனை உள்ளடக்கியதாக நடாத்தியது. அநேகர் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வப்பங்கு மக்கள் இதனை கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்துடன் இணைந்து சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். அவ்வப்பங்கு தந்தையர் இந்நற்செய்திப் பெருவிழாவிற்கு தமது முழு பங்களிப்பையும் வழங்கியதோடு தமது பங்கு மக்களையும் இதில் பங்கு பெறச்செய்திருந்தார்கள். இந்நற்செய்திப் பெருவிழாவை நமது அருட்பணி-யாளருடன் இணைந்து இந்திய கன்னட மாநிலத்தில் நற்செய்திப் பணியாற்றும் சகோதரர் ஜோர்ஜ் தரகன் அவர்கள் வழிநடத்தினார்கள்.

இந்நிகழ்வானது ஒரு ஆலயத்திருவழா போன்று நவநாட்களுடன் திருவிழா என்றவாறு நடைபெற்றது. அதாவது இறுதி நாளான ஜூலை 15ம் நாள் கொழும்பு 13, கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி வளாகத்தில் திருவிழிப்பு ஆராதனையுடன் முடிவுபெற்றது. ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இத்திருவிழிப்பு





ஆராதனையில் கலந்துகொண்டனர். பல குருக்களும், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகளும் இதில் பங்கு கொண்டனர். பலர் தூர இடங்களில் இருந்தும் வந்திருந்தனர்.

திருவிழிப்பு ஆராதனையானது, அன்று இரவு 8.00 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமானது. பின்னர் துணை ஆயருடன் சகோதரர் தரகன் மற்றும் அருட்பணியாளரும் வரவேற்கப்பட்டனர். பின்னர் துணை ஆயர் மறையுரை வழங்கினார்கள். தொடர்ந்து இறைபுகழ்ச்சியும் கீதங்களும் இசைக்கப்பட்டதோடு அருட்பணி. ஆனந்தன் பெர்னான்டோபுள்ளே அடிகளாரின் மறையுரையும் அனைவரையும் கவர்ந்தது. அதிகாலை 3.00 மணிக்கு நற்கருணை நாதரை துணையாயர்

**ஆக்கம் : நோபட் எனஸ்டன்**

அவர்கள் மேடைக்கு எடுத்துக்கொண்டு வந்தார்கள். அப்பவனியில் பீடப்பணியாளர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அணிவகுத்து வந்தது மிகவும் அழகாக இருந்தது. ஆராதனையின் பின்னர் நற்கருணை நாதர் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டு ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. பின்னர் துணை ஆயர் மேதகு என்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதிகாலை 5.15 மணியளவில் திருவிழிப்பு ஆராதனை நிறைவு பெற்றது.

நற்செய்தி பெருவிழாவின் ஆயத்த நாட்கள் மற்றும் திருவிழிப்பு ஆராதனையில் மன்றத்தின் பாடற்குழுவினர் தமது முழுப்பஙகளிப்பையும் வழங்கி சிறப்பாக தமது பணியினை நிறைவேற்றினர். அத்தோடு மன்றத்தின் உறுப்பினர்களும் அனைத்து பணிகளிலும் சிறப்பாக ஈடுபட்டதோடு இந்நிகழ்வு சிறப்பாக அமைய முழுமூச்சாக செயறபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் நடைபெறும் பெரிய சிலுவைப் பாதைக்கு அடுத்த மாபெரும் நிகழ்வாக இதனை குறிப்பிடலாம்.

பலவழிகளிலும் இந்நிகழ்வுக்கு உதவிய அனைவருக்கும் விசேட விதமாக நன்கொடைகள் வழங்கியவர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றி-களைக் கூறுகின்றோம்.

# நற்செய்திப் பெருவிழா நிகழ்வுகள் சில...

ஆரம்பம் : புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலயம்.



புனித அந்தோனியார் ஆலயம், தெமட்டக்கொடை



மாணவர்களுக்கான வழிபாடு, அன்னை வேளாங்கண்ணி ஆலயம், செக்கடித்தெரு



# கொழும்பு புனித ஜோசேவ்வாஸ் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நற்செய்திப் பெருவிழா


















ஆண்டவர் ஆட்சி செய்கின்றார், அவர் மாட்சியை ஆடையாய் அணிந்துள்ளார் (தி.பா 16)

# நற்செய்திப் பெருவிழா நிகழ்வுகள் சில...




புனித அன்னம்மாள் ஆலயம், வத்தளை





அன்னை வேளாங்கண்ணி ஆலயம், செக்கடித்தெரு






என் மீட்பும் மேன்மையும் கடவுளிடமே இருக்கின்றன. (தி.பா 62)

# மட்டக்குளி ஆலயத்தின் புதிய மைந்தன்



# அருட்தந்தை நிலோஜன் ஜோனி மிரான்டா அடிகள்

இறைவனின் அதி உன்னத அருளால் மட்டக்குளி புனித மரியாள் ஆலயத்திற்கு கடந்த 29 ஆண்டுகளுக்கு பின் ஒரு மைந்தன் கிடைத்தார். அம்மைந்தன் அருட்தந்தை நிலோஜன் ஜோனி மிரான்டா அவர்களே ஆவார். இவர் 1995.01.27ஆம் திகதி அன்று, திரு.ஜோன் அன்டனி மிரான்டா மற்றும் திருமதி.குளோரி நிர்மலா அவர்களுக்கு மகனாக பிறந்தார். இவர் மருதானை புனித சூசையப்பர் கல்லூரியில் கல்விகற்றார். சிறுவயதிலிருந்தே இறைவன் மீது அதிக பக்தி கொண்ட இவர் ஆலயத்தின் இளைஞர் மன்றம் மற்றும் திருப்பாலத்துவ சபையில் உறுப்பினராக சேவையாற்றினார்.

“தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன் நீ பிறக்கு முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்.” (எரேமியா 1: 5) என்று கூறப்பட்டுள்ளவாறு கடவுள் இவரை தமது பணிக்கென்று அழைத்தார். இதன் படி இவர் 2015.07.02 நாட்டிலிருந்து விடைபெற்று தமது இறைபணியை ஆரம்பிப்பதற்காக “வார்த்தை மனுவுருவானார்” சபையில் சேர்ந்தார். இறைவன் துணையால் 08 வருடங்களுக்கு பின் அருட்தந்தை கில்பர்ட் A.கிரேசேரா, D.Dஆல் கடந்த 2023.04.29 அன்று பிலிப்பைன்ஸில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அருட்தந்தையின் முதல் திருப்பலியானது 2023.05.14ஆம் திகதி அன்று மட்டக்குளி புனித மரியாள் ஆலயத்திலே ஒப்புக்கொடுக்கப்பட்டது. அத்திருப்பலி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அருட்சகோதர, அருட்சகோதரிகள், குருக்கள் மற்றும் பங்கு மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அருட்தந்தையே இறைவனுக்காக வாழ்நாள் முழுவதையுமே அர்ப்பணித்த உங்கள் சேவை சிறப்பாக தொடர வாழ்த்துகின்றோம்.

**தகவல்:- அன்புடன்,**
**மட்டக்குளி புனித மரியாள் ஆலய**
**பங்கு மக்கள்**



# இரண்டாம் வத்திக்கான் சங்கம் – ஓர் பார்வை



**ஒவ்வொரு நாடும் தனது சூழல், அனுபவம், தேவைக்கு ஏற்ப, திருப்பணிப் பயிற்சிமுறைத் திட்டத்தை உருவாக்கினால், திருச்சபையின் வாழ்வு நிச்சயம் செம்மைப்படும்.**

## 8. திருப்பணிப் பயிற்சி (விதித் தொகுப்பு)

**நன்றி. அருட்பணி. இ. கிளமெண்ட். ச.ச**

“திருப்பணிப் பயிற்சி” என்னும் விதித் தொகுப்பு திருப்பணியாளர்களுக்கு அளிக்கப்படும் திருப்பணிப் பயிற்சி பற்றிக் கூறுகிறது. இது அருட்பணி நோக்குடையதாக அமைய வேண்டும் என அறிவுறுத்துகிறது.

பாடத்திட்டங்கள் மற்றும் பயிற்சி முறைகள் மாற்றியமைப்பதாலும், அருட்பணியாலும் திருப்பணியாளர் தம் அருள் வாழ்வில் உறுதிபடப் பயிற்சி பெறுவர் எனவும், திருப்பணிப் பயிற்சியகங்கள் திருப்பணியாளர்களைப் பல துறைகளில் வல்லுநர்களாக உருவாக்குவதைவிட, தூய அருட்பணியாளர்களாக உருவாக்குவதையே முதன்மையும் முக்கியமுமான நோக்கமாகக் கொள்ள வேண்டும் எனவும், திருப்பணிப் பயிற்சியகங்களில் கற்றுத்தரப்படும் பாடங்களும் அளிக்கும் பயிற்சிகளும் இறைத்திட்டத்தையும் கிறிஸ்துவின் மறைநிகழ்வையும் மையமாகக் கொள்ள வேண்டும் எனவும், மெய்யியல் மற்றும் இறையியல் என்பன இந்நோக்கில் அமைய வேண்டும் எனவும், இறையியலின் உயர்நாடியான திருவிவிலியத்தின் ஒளியில் ஒழுக்க இறையியல், திருச்சபை வரலாறு மற்றும் திருச்சபைச் சட்டம் உட்படுத்தப்பட வேண்டும் எனவும் இவ்வேடு வலியுறுத்துகிறது. ஒவ்வொரு நாடும் தனது சூழல், அனுபவம், தேவைக்கு ஏற்ப, திருப்பணி பயிற்சிமுறைத் திட்டத்தை உருவாக்கினால், திருச்சபையின் வாழ்வு நிச்சயம் செம்மைப்படும். இத்தகுப் பயிற்சியில் உருவாகும் அருட்பணியாளர்கள் இன்றைய உலகோடும், மக்களோடும் உறவாடி, இயேசுவின் பணியைச் சிறந்த முறையில் தொடர முடியும் என்பதை இவ்வேடு தெளிவுப்படுத்துகிறது.

காலத்தின் தேவைகளுக்கேற்ப மனிதப் பண்பாட்டிலும், அறிவிலும், அருள்வாழ்விலும் அருட்பணியாளர்கள் வளர்ந்து முதிர்ச்சி அடைய திருப்பணிப் பயிற்சியை மாற்றியமைக்க வேண்டுவதன் அவசியத்தை இவ்வேடு வலியுறுத்துகிறது.

**தொடரும்**

### திருத்தந்தையின் செப உரை

**குழந்தைகளைப் போல தூய்மையான உணர்வுகளுடன் வாழவேண்டும். ஏனென்றால், குழந்தைகள் போல தூய்மையான உள்ளம் கொண்டவர்கள் கடவுளின் அரசைச் சார்ந்தவர்கள் என்றும், குழந்தைகள் தெளிவான உறவு, அயலாரின் வரவேற்பு, படைப்பு என அனைத்தையும் மதிக்கின்றார்கள்**

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

## உரோமையர் 4ஆம் அதிகாரம்

“ஆபிரகாம் கடவுள் மீது நம்பிக்கைக் கொண்டார். அதை கடவுள் அவருக்கு நீதியாய் கருதினார்”

வாழும் கடவுளின் பிள்ளைகளாகிய நாங்கள் நம்மைப் படைத்த கடவுள் மீது கொள்ளும் விசுவாசமே நமக்கு பலன் தருகிறதே அன்றி ஆண்டவர் ஆள் பார்த்து செயல்படுபவர் அல்ல. இறைவன் மீதும் அவர் அளித்துள்ள வாக்குறுதிகள் மீதும் அசையாத நம்பிக்கை கொள்பவர்களையே அவர் தமக்கு ஏற்புடையவர்கள் ஆக்கிக்கொள்கிறார். கிறிஸ்தவர்களாய் பிறந்ததால் மட்டுமன்றி அவரை அறிந்த மக்களாய் வாழ்பவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள். நாம் அனைவருமே இறைவனுக்கு பிள்ளைகள். ஆயினும் உதட்டளவில் அவரை “அப்பா” நம்முடைய தேவையின் பொருட்டு “தந்தையே” என்று அழைக்கும் போதும் கூட அவர் நமக்கு மறு உத்தரவு கொடுப்பார். ஏனெனில் இரக்கமும் அன்பும் நிறைந்தவர் அவர். தமது சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார்.

நம்முடைய வாழ்வு இவ்வுலகோடு மாத்திரம் முடிந்து-விடுமாயின் நாம் எமது எண்ணத்தின் படி வாழலாம். மாறாக எமது வாழ்வின் இலக்கே முடிவில்லாத பரலோக நித்திய வாழ்வுதான். அந்த ஓட்டத்திலே நாம் விசுவாசம் என்னும் கேடயத்தை தவறாது பிடித்து ஓடவேண்டும். ஆபிரகாமை மாத்திரமன்றி நம் ஒவ்வொருவரையும் இறைவன் தேர்ந்துள்ளார்.



“எவரது குற்றங்கள் மன்னிக்கப்பட்டு பாவங்கள் மறைக்கப்பட்டதோ அவர்கள் பேறுபெற்றோர்” அப்படியாயின் பாவிகளைத் தேடி வந்த எம் இரட்சகரிடம் எமது பாவங்களை அறிக்கையிட்டு அவரிடம் மன்னிப்பைப் பெற்றுவிட்டோம் என்று உறுதி கொண்டபின் மீண்டும் அந்த பாவத்தை நினையாமலும் அதன் வழியை நாடாமலும் இருப்போர் பேறுபெற்றோர். இவ்வாறு நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால் நிச்சயம் இறைவன் எமக்களித்துள்ள வாக்குறுதி பலன் தரும்.

– திருமதி. கோமஸ் –

**தொடரும்.**

# திருப்பலியில் கிறிஸ்துவின் பிரசன்னம் பற்றி....

- இதயத்தை விட சிறந்த பீடமில்லை இரக்கத்தை விட சிறந்த பலியில்லை (மாராஸ்)
- திருப்பலி கடவுள் நம்மிடையே வாழ்கிறார் என்பதன் வெளிக் கொண்டாட்டம் (மாராஸ்)
- இயேசுவை விட்டு விலகாது நடக்க நம்மை பக்குவப்படுத்துவது திருப்பலி (பசில்)
- திருப்பலி ஒரு முழுமையான செபம் (6ஆம் அருள் சின்னப்பர்)
- கடவுள் உலகை ஆட்சி செய்கிறார். செபம் கடவுளிமிருந்து நமக்கு வேண்டுவதை பெற்றுத்தருகிறது.
- இந்த உலகம் சூரியன் இல்லாமல் மிக எளிதாக செயல்படலாம், ஆனால் பரிசுத்த திருப்பலி இல்லாமல் செயல்பட முடியாது
(புனித பியோ)
- வாழும்போது சந்தோஷமாக இருக்கும் நாம் இறக்கும்போதும் சந்தோஷமாக இறக்க வேண்டுமென்றால்
- திருப்பலியின் மதிப்பை நாம் உணர வேண்டும் (புனித ஜான் மரிய வியான்னி)
- ஒரு முறை புனித திரேசா கடவுளுடைய அளவற்ற நன்மைகளால் ஆட்கொள்ளப்பட்டு நமது ஆண்டவரிடம் கேட்டார். “ஆண்டவரே உமக்கு நான் எப்படி நன்றி சொல்வேன்? அதற்கு நம் ஆண்டவர் “ஒரு திருப்பலியில் கலந்து கொள்” என்றார்.

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கானது

**I. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. திருமுழுக்கு யோவானுக்கு கொடுக்கப்பட்ட இறை பணி,
1) மெசியாவின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்வது.
2) இறைவனை பற்றி அறிவிப்பது
3) குணமாக்குவது
4) மக்களுக்கு பணிவிடை செய்வது

2. இயேசுவை அலகை சோதித்தபோது, மூன்றாவது சோதனை நமக்குத் தரும் செய்தி,
1) புகழை விரும்பி செயற்படக் கூடாது.
2) சமுதாய நலனுக்காக செயற்படல்.
3) இறைவனை நம்புதல்.
4) சுயநலத்துடன் வாழ வேண்டும்.

3. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள்.....
1) நிறைவு பெறுவர் 2) கடவுளைக் காண்பர்
3) இரக்கம் பெறுவர் 4) ஆறுதல் அடைவர்

4. இறைசெய்தியை நம்ப மறுத்ததால் செக்கரியாவுக்கு ஏற்பட்ட விளைவு
1) பேச்சாற்றலை இழத்தல்
2) மக்கள் கேலி செய்தல்
3) தூபம் காட்டும் பணி தடைப்படல்
4) எலிசபெத் கோபமடைதல்

5. வனத்துப் பிதாக்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவர்,
1) தேப்ஸ் சின்னப்பர் 2) பக்கோமியாஸ்
3) பசில் 4) வனத்து அந்தோனியார்

6. இயேசுவின் பகிரங்க வாழ்வும், மறைதூதுப் பணியும் ஆரம்பிப்பது,
1) அவரை கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த பின்.
2) திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றதுடன்
3) கானாவூரில் தண்ணீரை இரசமாக மாற்றி பின்பு
4) சாத்தானின் சோதனைகளை வென்றவுடன்.

7. நோயில்பூசுதல் தொடர்பாக திருச்சபையின் படிப்பினை,
1) கிழக்கு, மேற்கு திருச்சபையில் நோயாளர்களை தைலத்தால் பூசும் வழக்கம் இருந்துள்ளது.
2) திருத்தூதர்கள் நோயாளர்ளை குணமாக்கினர்
3) நோயாளியின் மீட்புக்காக குணமளிக்கும்படி இறைவனிடம் வேண்டப்படுகிறது.
4) தொடக்கத் திருச்சபையில் இருந்துள்ளமை.

8. துறவற வாழ்வின் ஆரம்ப கர்த்தாக்களாக குறிப்பிடப்படுபவர்கள்,
1) புனித அந்தோனியார், புனித பக்கோமியோ
2) புனித பக்கோமியோ, புனித ஆசீர்வாதப்பர்
3) புனித அந்தோனியார், புனித அகுஸ்தீனார்
4) புனித அகுஸ்தீனார், புனித பிரான்சிஸ் அசீசி

9. திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து கொண்டுவரும்படி கேட்டவர் யார்?
1) ஏரோதின் மகள் 2) ஏரோதின் மகன்
3) ஏரோதியாளின் மகள் 4) தலைமை அமைச்சர்

10. பின்வரும் அருளடையாளங்களை கவனத்தில் கொள்வோம்
A. திருமுழுக்கு B. உறுதிப்பூசுதல் C. திவ்விய நற்கருணை D. ஒப்புரவு E. நோயில் பூசுதல்
மேற்கூறியவற்றில் குணமளிக்கும் மற்றும் சகித்துக்கொள்ளும் சக்தியைப் பெற்றுத்தரும் அருளடையாளங்கள்,
1) A யும் B யும் 2) A யும் E யும்
3) A யும் C யும் 4) D யும் E யும்

11. குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் உரிய இறைவாக்குப் பணியில் பிரதான தூதுரைப் பணி எது?
1) மறையை அறிவித்தல்
2) நோயாளர்களுக்கு மருத்துவம் செய்தல்
3) சிறுவர்களை பராமரித்தல்
4) ஏழைகளுக்கு உதவுதல்

12. கிறிஸ்தவ திருமணத்தின் சிறப்பான நோக்கம்.
1) ஒருவருக்காக ஒருவர் நேரம் ஒதுக்குதல்
2) வீட்டைக் கட்டி வாழுதல்
3) இருபிரிவினரின் பெற்றோரின் தேவைகளை பூர்த்தி செய்தல்
4) அன்னியோன்னியமாக அன்பாக வாழுதல்

13. இறையரசின் பிரசைகளான நாம் இன, மத பேதமில்லாமல் தேவையில் உள்ளவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்பதை விளக்கும் உவமை
1) காணாமறபோன மகன் 2) நல்ல சமாரியன்
3) கடுகுவிதை 4) பெருவிருந்து

14. துறவற வார்த்தைப் பாடுகளில் உள்ளடங்காதது,
1) ஏழ்மை 2) பொறுமை
3) கற்பு 4) கீழ்ப்படிவு

15. இறைவார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்பவர்கள்,
1) வழியோரம் விழுந்த விதைகள்
2) நல்ல நிலத்தில் விழுந்த விதைகள்
3) மண்ணில்லாப் பாறைகளில் விழுந்த விதைகள்
4) முட்செடிகளிடையே விழுந்த விதைகள்

16. "நோயாளியின் தூய தைலம் பூசுதல்" என்னும் அப்போஸ்தலிக்க படிப்பினையை எழுதியவர்,
1) திருத்தந்தை 6வது சின்னப்பர்
2) திருத்தந்தை 2வது சின்னப்பர்
3) திருத்தந்தை 13வது அருளப்பர்
4) திருத்தந்தை 10வது பத்திநாதர்

17. நற்செய்தி நூல்களில் புதுமைகள் நிகழ்வதற்கு மிகவும் அவசியமானதாக விளங்கியது.
1) நம்பிக்கையாகும் 2) வேண்டுகோள்கள்
3) அனுதாபம் 4) பரிந்துரை

18. நற்செய்தி பயணங்களின் விளைவுகள்
A. பல இடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது.
B. சென்ற இடங்களில் வேலை செய்தனர்.
C. கடவுளின் பெயரால் பேய்கள் விரட்டப்பட்டன.
D. கடவுளின் பெயரால் மந்திரங்கள் செய்தனர்.
1) Aயும் Dயும் 2) Bயும் Cயும்
3) Cயும் Dயும் 4) Aயும் Cயும்

19. மலைப்பொழிவில் இடம்பெறும் படிப்பினைகளில் அடங்காதது,
1) பழிவாங்குதல் 3) எட்டுப்பேறுகள்
2) பெற்றோரை மதித்தல் 4) உப்பும் ஒளியும்

20. பணப்பையோ, வேறு பையோ, மிதியடியோ எடுத்துச்செல்ல வேண்டாம் என இயேசு தமது சீடர்களுக்கு கூறியது மறைதூதுப் பணியில் ஈடுபட்டி-ருப்பவர்களுக்கு கிடைக்கும் ...........
1) இறைபராமரிப்பை 2) வழிகாட்டுதலை
3) இறை புகழ்ச்சியை 4) ஆன்மீக கருத்தை

21. சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடை-யாளங்கள்,
1) குருத்துவம், நற்கருணை
2) குருத்துவம், திருமணம்
3) குருத்துவம், மெய்விவாகம்
4) குருத்துவம், உறுதிப்பூசுதல்

22. இயேசு பாலைவனத்தில் அலகையினால் எத்தனை நாட்கள் சோதிக்கப்பட்டார்,
1) 30 2) 40 3) 60 4) 50

23. இயேசு எட்டுப்பேறுகள் மூலம் எமக்கு எடுத்துக்-காட்டுவது,
1) நோன்பு பற்றிய படிப்பினை
2) தருமம் செய்தல் பற்றி
3) இறையாட்சியின் மதிப்பீடுகள்
4) பொன்விதி பற்றி

24. குருத்துவம் சார்ந்த துறவற சபைகளில் ஒன்று,
1) அமல மரித்தியாகிகள் சபை
2) அன்புச் சகோதரர் சபை
3) பிரான்சிஸ்கன் மறைதூதுத் சபை
4) மாறிஸ் சகோதரர்கள் சபை

25. புதுமைகள் என்பது இயற்கைக்குள் நாம் அறிந்த உண்மைக்கு மாறாக இடம்பெறும் ஓர் செயல் என கூறியவர்.
1) தூய அம்புறோஸ் 2) தூய அக்குவைனாஸ்
3) தூய அகுஸ்தினார் 4) தூய ஏரோணிமுஸ்

26. நோயில்பூசுதல் அருளடையாளம் வழங்கும்போது திருத்தைலம் பூசப்படுவது,
1) நெற்றியில் 2) கையிலும் நெஞ்சிலும்
3) கைகளில் 4) நெற்றியிலும் கைகளிலும்

27. ஆயரின் தலைமைத்துவத்தின் கீழ் பொதுநிலையினர் மத்தியில் வாழ்ந்து, அவர்களுக்கு பணிபுரிந்து அவர்களோடு இறையரசை நோக்கி பயணிக்க தம்மை அர்ப்பணித்துள்ளவர்கள்,
1) மறைமாவட்டக் குருக்கள் 2) துறவற சகோதரர்கள்
3) துறவற குருக்கள் 4) துறவற சகோதரிகள்

28. இயேசு சோதனைகள் முடிந்த பின் எருசலேம் தேவாலயம் சென்று யாருடைய சுருளேட்டை எடுத்து வாசித்தார்?
1) இறைவாக்கினர் நாத்தான்
2) இறைவாக்கினர் எரேமியா
3) இறைவாக்கினர் எசாயா
4) இறைவாக்கினர் ஆமோஸ்

29. 72 பேரை பணிக்கனுப்பும் செய்தி எந்த நற்செய்தியில் தரப்பட்டுள்ளது?
1) லூக்கா நற்செய்தி 2) மத்தேயு நற்செய்தி
3) யோவான் நற்செய்தி 4) மாற்கு நற்செய்தி

30. விண்ணகத்தில் இருப்பது என்பதன் கருத்து,
1) விண்ணுலகில் இருப்பது
2) செல்வந்தராய் இருத்தல்
3) கிறிஸ்துவோடு இருப்பது
4) திருச்சபையில் இருப்பது

31. ஆயர்களை நியமிக்கும் அதிகாரம் உடையவர்,
1) திருத்தொண்டர் 2) திருத்தந்தை
3) குருக்கள் 4) துறவியர்

32. பொதுக்குருத்துவத்தின் மூலம் கிடைக்கும் இறைவா-க்குப் பணியில் ஈடுபட உதவியாய் அமைவது,
1) கத்தோலிக்க மறைப்பாடசாலை
2) தூய வின்சன் டி போல் சபை
3) கத்தோலிக்க மாணவர் இயக்கம்
4) மரியாயின் சேனை

33. எந்த ஒரு கத்தோலிக்கக் குருவானவருக்கும் உறுதிப்பூசுதல் வழங்க அதிகாரம் கிடைப்பது,
1) ஒருவர் நோயுற்று இருக்கும்போது
2) ஒருவர் ஊனமுற்று இருக்கும் போது
3) ஒருவர் மரணத்தருவாயில் இருக்கும்போது
4) விபத்தின்போது

34. “மகளே உனது........... உன்னை குணமாக்கிற்று.” (மாற்கு 5:34)
1) அன்பு 2) நம்பிக்கை 3) செல்வம் 4) வேண்டுதல்

35. திருமுழுக்கின் முக்கியமான, கட்டாயமான அடையாளம் என்ன?
1) வெண்ணிற ஆடை 2) தைலம்
3) மெழுகுதிரி 4) தண்ணீர்

36. திருமுழுக்கு யோவானிடம் இயேசு திருமுழுக்கு பெற்றதன் மூலம் வெளிப்படும் விடயம்
1) பெருமை 2) வெற்றி
3) தாழ்மை 4) திறமை

தொடரும்


# பைபிள் ஹீரோக்கள்

தொடர்ச்சி..... 15

# நீதித் தலைவர்கள்




ஆக்கம் : இவஞ்சலிஸ்டா வினோலிசன்





இஸ்ரயேல் மக்கள் ஆண்டவருக்கு பிடிக்காத செயல்களை செய்த போதெல்லாம் ஆண்டவர் இஸ்ராயேலரை எதிரிகளிடம் ஒப்புவித்-ததோடு அவர்களை காப்பாற்ற நீதி தலைவ-ர்களை நியமித்தார். இந்நீதிதலைவர்கள் இறைவிருப்பப்படி வாழ்ந்தவர்கள் இனி அவர்கள் ஒவ்வொ-ருவரையும் பற்றி பார்ப்போம்.

## 1. ஒத்னியேல்



இஸ்ராயேலர் ஆண்டவரை மறந்து பாகால் எனும் வேற்று கடவுளை வணங்கினார்கள். இதனால் மெசப்பொத்தாமியா மன்னனுக்கு எட்டாண்டுகள் அடிமைகளாக இருந்தனர். அடிமை வாழ்விலிருந்து விடுவிக்கும்படி ஆண்டவரிடம் அழுது புலம்பினர். அப்போது அவர்களை விடுவிக்க கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவரே ஒத்னியேல் ஆவார். இவர் தந்தை கெனாசின் ஆவார். ஆண்டவரின் ஆவியானவருடைய ஆற்றலால் மக்களுக்கு நீதி வழுவாது தீர்ப்பு வழங்கினார். அடிமைகளாயிருந்த இஸ்ராயேலரை மீட்டார். இவருடைய காலத்தில் 40 ஆண்டுகளாக நாடு அமைதியாக இருந்தது.

## 2. ஏகூது




திரும்ப இஸ்ராயேல் மக்கள் பாவம் செய்ததால் ஆண்டவர் அவர்களை மோவாபிய மன்னனுக்கு அடிமைப்-படுத்தினார். பதினெட்டு ஆண்டுகளாக கடும் வேதனை அனுபவித்தார்கள். பாவம் செய்துவிட்டோம் என திரும்ப கதறி அழுதவர்களை விடுவிக்க தெரிந்தெடுத்தவரே ஏகூது ஆவார். இவர் இடது கை பழக்கமுடையவர்.

இஸ்ராயேல் மக்கள் மோவாப்பிய அரசருக்கு கப்பம் கட்டி வந்தார்கள். இவர் வலது தொடையில் கூர்மையான வாளை கட்டி, அதனை தம் ஆடையால் மூடிக்கொண்டு, மக்களின் கப்பத்தையும் எடுத்துக் கொண்டு சென்றார். கப்பத்தை செலுத்தி விட்டு, மீண்டும் அரசரிடம் சென்று, இரகசியச் செய்தி உள்ளதாக சொல்லி, அனைவரையும் அனுப்பிவிட்டு, தன் கத்தியை உருவி குத்தி கொன்றார். ஏகூத் எதுவும் நடக்காதது போல குதிரை ஏறி சென்று, நடந்ததை கூற, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

அதன் பின்னர் நீண்ட நெடிய 80 ஆண்டுகள் நாட்டில் அமைதி நிலவியது.

ஏனையோரை பற்றி இனி மலரும் இதழ்களில் பார்ப்போம்.

**தொடரும்.**



ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர். (தி.பா 33)

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**மேலிருந்து கீழ்:**

1. ஆதித்திருச்சபையில் தன் சொத்தை மறைத்து பொய்யுரைத்து பேதுருவின் காலடியில் உயிர் நீத்தவன்.

3. ‘பழம்’ என்பதன் மறுபெயர்.

6. திரு அவையின் முதல் தலைவர்.

14. ஒவ்வொரு புத்தகத்திலும் இது உண்டு.

16. “சிறுத்தை“ என்றும் கூறலாம் (தலை கீழாய் உள்ளது)

21. இதன் மணி மண்ணில் விழுந்து மடியாவிடில் பலன் கொடாது.

30. முக்கனிகளில் ஒன்று. (த.கீ.)

**இடமிருந்து வலம்:**

1. அழிவிற்கு முந்தியது இது என்பர். (இடம்மாறியுள்ளது)

11. ஐம்புலன்களில் ஒன்று.

13. மலைபோன்று வரும் துன்பம் யாவும் இறையருளால் இது போல உருகும். (இடம்மாறியுள்ளது)

19 12 கோத்திரங்களின் தந்தை.

29. ஆதாமின் இவ்வுறுப்பினின்று ஏவாள் உருவாக்-கப்பட்டாள்.

32. “மறுமை“ என்பதன் எதிர் பதம். (இடம்மாறியுள்ளது)

**விடைகள் 22ஆம் பக்கம்**

## 09 சேனைக்குரிய...

பார்க்கக்கூடும். மாறாக தாமே பேசத் தொடங்குவதை விட செவிமடுப்பதையே தமது நோக்கமாக கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு பொறுமையோடும், மரியாதையோடும் செவிமடுத்தல் நமது கருத்துக்கள் அவர்களால் கேட்கப்படும். வெற்றி நமது உரிமையாகிறது.

“பொது நிலையினரின் மறைத்தூதுப் பணியில் குடும்பங்கள் பங்கேற்கும் நற்செய்திப் பணியை வலி-யுறுத்தாமல் இருக்கமுடியாது. திருச்சபை வரலாற்றில் பல்வேறு காலகட்டங்களிலும், இரண்டாம் வத்திக்கான் சங்க காலத்திலும் குடும்பம் ஒரு ‘இல்லத் திருச்-சபை’ என்ற நற்பெயருக்குப் பொருத்தமானதாக இருந்திருக்கிறது. இதன் பொருள் என்னவென்றால் உலகளாவிய திருச்சபையில் ஒட்டுமொத்த மறைபரப்புப் பணியின் பல்வேறு அம்சங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களிலும் கண்டிப்பாக காணப்பட வேண்டும். மேலும் திருச்சபையைப் போலவே நற்செய்தியை ஊடுருவச் செய்து, அதைப் பரப்பும் இடமாக குடும்பம் அமைய வேண்டும்.

வீடுகளை சந்திக்க பிரசீடியம் தன் அணுகுமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டிய சேனையார் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு தங்கள் சந்திப்பின் நோக்கத்தை தெளிவுபடுத்தவேண்டும்.

இத்திருப்பணியை உணர்ந்த குடும்பங்களில் அனைத்து உறுப்பினரும் நற்செய்தி அறிவிப்பாளர்-களாகவும், நற்செய்தி அறிவிக்கப்பட்டவர்களாகவும் மாறுகிறார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நற்செய்தியைக் கொடுப்பவர்களாக மட்டுமல்லாமல், தங்கள் பிள்ளைகள் அந்த நற்செய்தியை நிறைவாக வாழ்வதால், அதே நற்செய்தியை தாங்களே பெற்றுக்-கொள்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

இத்தகையதொரு குடும்பம், மற்றும் பல குடும்பங்களுக்கும், தங்களைச் சார்ந்த சுற்றிலுமுள்ள குடும்பங்களுக்கும் நற்செய்தியாளராக மாறுகின்றது. கலப்புத் திருமணத்தின் மூலம் உருவான குடும்பங்களும் தங்களது பொதுத் திருமுழுக்கு அழைத்தலால், தங்கள் பிள்ளைகளுக்கு கிறிஸ்துவை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் கடின பணியையும் மேற்கொள்ள வேண்டும்” (EN - 71)

**நற்செய்தியை ஊடுருவச் செய்து அதைப் பரப்பும் இடமாக அமைய வேண்டும்.**

**ஆண்டவரே, உமக்கே புகழ் சாற்றிடுவேன். (தி.பா 101)**

| | | |
|---|---|---|
| 5.2 | இந்தியத் தமிழர்கள் எனக் குறிப்பிடப்படும் இனம், மொழி, கலை, பண்பாடு என்பன சரியாக அடையாளங் காணப்படாமையும் பாதுகாக்கப்படாமையும். | அனைத்து இன மக்களினதும் பண்பாட்டு வேறுபா-டுகள், மரபுகள், மொழி, கலை, கலாச்சாரத்துக்கு மதிப்பளித்து முக்கியத்துவம் வழங்கி ஏற்றுக-கொள்ளுதல். |
| 5.3 | இந்திய வம்சாவளித் தமிழர்களது (மலையகத் தமிழர்கள்) 200 ஆண்டு கால வரலாறு இலங்கை வரலாற்றில் சரியாக விபரிக்கப்படவில்லை. | பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ்களின் வரலாற்றினைப் பாடசாலைக் கலைத்திட்டத்திலும், பல்கலைக்கழகங்களிலும், கல்வியல் கல்லூரிகளிலும் அறிமுகம் செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களது பங்களிப்பு, அவர்கள் செய்த தியாகங்கள் என்பவற்றை அறிந்து கொள்ள வழிவகுத்தல். அவர்-களது கலை கலாசார பண்பாட்டு அம்சங்க-ளைப் புரிந்து கொள்ளல். |

## ஊடக மாநாட்டில் பங்கேற்ற ஆயர்கள்

- **அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை** - கொழும்பு உயர்மறைமாவட்டம்.
- **மேதகு. ஹெரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகை** - தலைவர், இலங்ககை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை, குருனாகல் மறைமாவட்டம்.
- **மேதகு. ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை** - தலைவர், நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழு, யாழ்ப்பாண மறைமாவட்டம்.
- **மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை**, - பிரதித் தலைவர், நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழு, துணை ஆயர், கொழும்பு உயர்மறைமாவட்டம்.
- **மேதகு. வெலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை** - கண்டி மறைமாவட்டம்.
- **மேதகு. க்ளீட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகை** - இரத்தினபுரி மறைமாவட்டம்.
- **மேதகு. ரேமன் விக்கிரமசிங்க ஆண்டகை** - காலி மறைமாவட்டம்.
- **மேதகு. யூட் நிஷாந்த சில்வா ஆண்டகை** - பதுளை மறைமாவட்டம்.

**30.06.2023**

## 08 அருட்தந்தை...

அவர் கடைசியாக பணியாற்றிய பங்கு கொள்ளுப்பிட்டி பங்காகும். அங்கு இருந்து அவர் ஓய்வு பெற்று, பேராயரின் அனுமதியுடன் தன் சகோதரியின் இல்லத்தில் வாழ்ந்து வந்தார். மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். தன் குருத்துவ வாழ்வில் 25வது வெள்ளிவிழா கொண்டாடும் காலத்தில் தானாகவே பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மாகஸ் ஆண்டகையிடம் கேட்டுக் கொட்டாஞ்சேனை பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். தன் வெள்ளிவிழா எந்த வித கொண்டாட்டங்களும் இல்லாமல் நடக்க பார்த்துக் கொண்டார். அதேபோல் தன் குருத்தவ வாழ்வில் 50வது யூபிலிக் கொண்டாட்டமும் நடைபெறாதவாறு பார்த்துக் கொண்டார். பலர் இக்கொண்டாட்டங்களை நடாத்த முன்வந்தபோதும் அதற்கு அவர் இடம் கொடுக்கவில்லை.

அருட்தந்தை ஒரு மாதா பக்தன் அடிக்கடி மடுத் திருத்தலத்துக்கு சென்று செபிப்பது வழக்கம். ஒரு சிறந்த பணியாளரை அனுபவம் நிறைந்த தமிழ் குருவை இழந்துள்ளோம். அவருடைய இடைவெளியை யாரும் நிறைக்க முடியாது. அவருடைய இறுதி விருப்பத்தின் பேரில் அவர் பிறந்த பங்கின் குருசுக் கோவில் என்னும் ஆலயத்தின் அருகில் அருட்தந்தை அடக்கம் செய்யப்பட்டார் அவருக்காக மன்றாடுவோம். அன்னை மரியாள் அவருக்காகப் பரிந்து பேசுவாராக. அவருடைய அனபைப் பெற்றோர் அவரிடம் இருந்து சேவை பெற்றோர், அருட்சாதனங்களைப் பெற்றோர் அவருக்காக செபிக்க விசேடமாக வேண்டி நிற்கின்றேன்.

**பிறப்பு 28.11.1943**

**குருப்பட்டம் 19.12.1970**

**இறப்பு 04.05.2023**

## 21 பொருளுள்ள...

**மேலிருந்து கீழ்:**
1. அனனியா
3. கனி
6. பேதுரு
14. பக்கம்
16. புலி
21. கோதுமை
30. பலா

**இடமிருந்து வலம்:**
1. அகந்தை
11. காது
13. பனி
19. யாக்கோபு
29. விலா
32. இம்மை



# SUGUMAR

## RELIGIOUS REPOSITORY

Since 1979

**Wholesale & Retail**
**Dealers in all kinds of Religious Articles**

*No. 16,*
*Sri Ramanathan Road,*
*Colombo - 13*
*Tel : 0112433197*




ANTON ENTERPRISES

# Anton Enterprises



UG : 51, 59, 60. People's Park Shopping Complex, Colombo-11.

Tel: 011-2541041, 011 4325243.

Fax: 011 2440800 Frame Shop : 011 4325242


"மறை வளர ஒன்றிணைவோம்"


இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 22.10.2023 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Published at: J.R.C.A Creations, No 78, Brass Founder Srteet, Colombo 13.